DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

**CC. No**. 03/2023

Deposition of LW1 examined as PW 1 Dt. 01.10.2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஆனந்த் | Caste | : | |
| Father's/Husband's Name | : | செல்வம் | Calling | : | |
| Village | : | கொற்றவநல்லூர் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 37 /2024 |

(A1 to A3 Present. )

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியில் கௌரவ விரிவுரையாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கொரோனா தடைக் காலத்தில் 2021ம் ஆண்டில் ஆஜர் எதிரிகள் சாராயம் எங்கள் ஊரில் விற்று வந்தனர். அப்போது ஊர் மக்களில் யாரோ மேற்படி எதிரிகள் ஊரில் சாராயம் விற்று வருகிறார்கள் என்ற தகவலை போலிசாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். அதனால் போலிசார் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தனர். எனது அண்ணன் அருள்ராஜ் ஊராட்சி மன்ற தலைவராக எங்கள் ஊரான நீடூரில் உள்ளார். மேற்படி எனது அண்ணன் தான் மேற்படி தகவலை போலிசாருக்கு தெரிவித்து இருப்பார் என்ற சந்தேகத்தின் பேரில் ஆஜர் எதிரிகள் மூவரும் 11.06.2021ம் தேதி மாலை 05.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கு வந்து வாசலில் நின்று கொண்டு குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே என்ற ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார். எங்களை சும்மாவிடமாட்டேன் என்றும் கொலை மிரட்டல் விடுத்தனர். எங்களுக்கு அவர்கள் திட்டியது மிகவும் அவமானமாகவும், பயமாக இருந்ததால் மேற்படி எனது அண்ணன் அருண்ராஜ் மேற்படி பிரச்சனை செய்த எதிரிகள் மீது ஒரு புகார் அளிக்கும் படி என்னையும், எனது சித்தப்பா தியானேஸ்வரையும் காவல் நிலையம் நீங்கள் செல்லுங்கள் பின்னாடி நானும் வருகிறேன் என்று கூறினார். அதனால் நான் ஒரு இருசக்கர வாகனத்திலும், தியானேஸ்வரன் அவரது இருசக்கர வாகனத்திலும் சென்றோம். நாங்கள் ஆனந்ததாண்டவபுரம் இரயில்வே கேட் அருகில் சென்றுகொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் மூவரும் எங்களை வழி மறைத்து, எஙகளை குச்சிக்காரி மவனே, தேவடியா மவனே என்ற ஆபாசமான வார்த்தைகளால் திட்டினர். நாங்கள் இருவரும் எங்களது இருசக்கர வாகனத்தை நிறுத்தி வைத்துவிட்டு கீழே இறங்கி ஏன் இவ்வாறு பேசினீர்கள் என்று கேட்டேன். அதற்கு நீங்கள் காவல் நிலையம் சென்று எங்கள் மீது புகார் கொடுக்க கூடாது என்றும் கொடுத்தால் உங்களை கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிவிட்டு எதிரி சரண்ராஜ் கையில் வைத்திருந்த அருவாளை எடுத்து எனது மண்டையில் கொத்திவிட்டார். அதை தடுக்க வந்த எனது சித்தப்பா மகன் தியானேஸ்வரனுக்கு வலது தோள்பட்டையில் அருவாள் கிழித்தி காயம் ஏற்பட்டது. நாங்கள் இருவரும் எங்களை காப்பாற்றுங்கள் என்று கத்தினோம், அருகில் இருந்தவர்கள் சம்பவ இடத்திற்கு வந்தனர். மேற்படி எதிரிகள் மூவரும் எங்களை கொலை மிரட்டல் விடுத்துவிட்டு சென்றனர். அப்போது எனது மாமா மகன் ராஜ்குமார், எனது அண்ணன் அருண்ராஜ் போன்றவர்கள் சம்பவ இடத்திற்கு வந்தனர். எங்கள்

இருவரையும் ராஜ்குமாரும், அருண்ராஜம் எங்களை இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சுமார் 05.30 சென்றனர். சுமார் 05.45 மணியளவில் நான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரணை செய்து என்னிடமிருந்து வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும்புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நீங்கள என்ன வேலை செய்து வருகிறீர்கள் என்றால் கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியில் கௌரவ விரிவுரையாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு எங்கு வேலை செய்தீர்கள என்றால் திண்டுக்கல்லில் வேலை செய்தேன். இதற்கு முன்பு உங்கள் மீது வழக்கு ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. என்ன வழக்கு என்றால் இ.த.ச.பிரிவு 376 ன் கீழ் வழக்கு உள்ளது. அந்த வழக்கு சம்மந்தமாக உங்கள ஊரில் பஞ்சாயத்து ஏதாவது பேசினார்களா என்றால் இல்லை. அந்த வழக்கில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் பெண் உங்கள் ஊரை சேர்ந்தவர் இல்லை என்றால் சரிதான். அவர் உங்கள் சமுகத்தை சேர்ந்தவர் இல்லை என்றால் சரிதான். இதனால் அந்த பெண் தரப்பினருக்கும், உங்களுக்கும் விரோதம் இருந்து வந்தது என்றால் அந்த சமயத்தில் இல்லை இந்த வழக்கிற்கு பின்னர் எதிரிகளின் தூண்டுதலினால் எங்களுக்குள் விரோதம் ஏற்பட்டது அதன் பின்னர் தான் அந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. வேறொரு பெண்ணை திருமணம் செய்துகொண்டீர்கள் என்றால் சரிதான். சாராயம் விற்பனை செய்வது தொடர்பாக எதிரிகள் திட்டியதாக உங்கள அண்ணன் தான் உங்களிடம் சொல்லி புகார் கொடுக்க சொன்னார் என்றால் இல்லை நானும் அந்த இடத்தில் இருந்தேன். அந்த இடத்தில் இருந்தேன் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால சொல்லியுள்ளேன். எதிரிகள் மீது யாரும் புகார் கொடுக்கவில்லை என்றாலும், எதிரிகள் பொது இடத்தில் உங்களை திட்டவில்லை என்றாலும் எங்கள் வீட்டில் வந்து கையில் அருவாளை வைத்துக் கொண்டு எங்களை திட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள். உங்கள் அண்ணன் செல்வாக்கு மிக்க நபர் எதிரிகள் திட்டியிருந்தால் அவரே புகார் கொடுத்திருப்பார் நீங்கள் புகார் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் எங்கள் அண்ணன் இருந்தார் அவர் தான் எங்களை முன்பு காவல் நிலையம் போகச் சொன்னார். உங்கள் ஊரிலிருந்து மயிலாடுதுறை வருவதற்கு ஆனந்ததாண்டவபுரத்தை தவிர வேறு வழி உள்ளதா என்றால் நீடூர் வழியாகவும் வரலாம் ஆன்நததாண்டவபுரம் வழியாகவும் வரலாம்., நாங்கள் ஆனந்ததாண்டவபுரம் இரயில்வே கேட் வழியாக வந்தோம். ஆனந்ததாண்டவபுரம் வழியாக வரவில்லை நீங்களாகவே உங்களுக்கு காயத்தை ஏற்படுத்திக் கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. புகாரை கைப்பட எழுதினீர்களா என்றால் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் வாக்குமூலமாக பெற்றுக் கொண்டார்கள். உங்களை எத்தனை நபர்கள் தாக்கினார்கள் என்றால் 3 நபர்கள் தாக்கினார்கள். போலிஸ் விசாரணையிலும் 3 நபர்கள் தாக்கினார்கள் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். மருத்துவர் விசாரிக்கும் போது 3 நபர்கள் தாக்கினார்கள் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். (சாட்சி பின்னிட்டு மருத்துவர் என்னை விசாரிக்கும் போது அருவாளால் என்னை தலையில் வெட்டி விட்டார்கள் என்று சொன்னேன் என்று கூறுகிறார்). எதிரிகள் மூவரும் உங்களை எந்த காலக்கட்டதிலும் எந்த ஆயுத்தாலும் தாக்கவில்லை என்றால் சரியல்ல.

அப்படி தாக்கியிருந்தால் போலிசார் அந்த ஆயுதத்தை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள் வழக்கிற்காக மிகைப்படுத்தி சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரி கருணாகரன் என்ன வேலை செய்கிறார் என்றால் தற்போது சமையல் வேலை செய்து வருகிறார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலக்கட்டத்திலும் அவர் சமையல் வேலை செய்து வந்தார் என்றால் அவர் அப்போது சாராயம் விற்று வந்தார் காவல் நிலையத்தில் அதுசம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த காலக்கட்டத்தில் அவர் சாராயம் விற்க வில்லை என்றாலும் அவர் மீது வழக்கு எதுவும் இல்லைஎன்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலக்கட்டத்திலும் அவர் சமையல் வேலை செய்து வந்தார் அவர் சாராயம் விற்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எதிரிகள் சரண்ராஜ், கார்த்திகேயன் இல்லை என்றால் மூன்று பேரும் இருந்தார்கள். தியானேஸ்வரன், ராஜ்குமார், அருண்ராஜ் ஆகியோர் உங்கள் உறவினர் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலக்கட்டத்தில் எதிரிகள் யாரும் என்னை வழிமறித்து தாக்கவில்லை என்றாலும், பொதுஇடத்தில் ஆபாச வார்த்தைகளால் திட்டிவில்லை என்றாலும், ஆயுதத்தால் தாக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் எந்த காலக்கட்டத்திலும் சம்பவ இடமான இடத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளை முன்வழக்கில் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசியல் செலவாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்து எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியமளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் ஊரில் தங்கராஜ் மகன் சரவணன் என்று யாராவது உள்ளார்களா என்றால் உள்ளார். அவருடைய நிலத்ை உங்கள் அண்ணன் சாகுபடி செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. திண்டுக்கல் ஆசிரியர் வேலைக்கு சென்றுவிட்டு எப்போது வந்தீர்கள் என்றால் வாரம் ஒருமுறை வருவேன். எதிரி கார்த்திகேயன் மைத்துனர் சரவணன் என்பவரின் நிலத்தை சாகுபடி செய்வதற்கு கார்த்திகேயன் குத்தகைக்கு எடுத்த விபரம் உங்கள் அண்ணன் அருண்ராஜ்க்கு தெரிந்து அதன் பிறகு சரவணனிடமிருந்து அருண்ராஜ் அந்த நிலத்தை வாங்கி சாகுபடி செய்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீங்களும் உங்கள அண்ணனும் ஒற்றுமையாக உள்ளீர்கள் இந்த விபரம் அனைத்தும் உங்களுக்கு தெரியும் அதனை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. இதைப்பற்றி எதிரி கார்த்திகேயன் உங்களிடம் கேட்கும்போது அவரை நீங்கள் மூவரும் சேர்ந்து தாக்கியுள்ளீர்கள் என்றால் இல்லை. இதுசம்மந்தமாக அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து உங்கள செல்வாக்கை பயன்படுத்தி உங்கள புகாரை விசாரணைக்கு எடுக்கவில்லை என்றால் நாங்கள் அவர்களை தாக்கவில்லை புகார் எதுவும் அவர்கள் கொடுக்கவில்லை. நிலம் சம்மந்தமான பிரச்சனையையும், உங்கள் மீது .ஏற்கனே உள்ள வழக்கிற்காகவும் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வாகனத்தை ஓட்டி நிலை தடுமாறி கீழே விழுந்து உங்களுக்கு காயத்தை ஏற்படுத்திக்கொண்டீர்கள் என்றால் சரியல்ல. எத்தனை நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தீர்கள் என்றால் 2 நாட்கள்.